# AWARD FOR GREEN INITIATIVE ACTIVITY
# (06.08.2021)



## விசாலாட்சி மகளிர் கல்லூரிக்கு விருது


திருப்பூர், ஆக.6: இந்திய அரசின் மத்திய கல்வி அமைச்சகம், உயர்கல்வித்துறையின் கீழ் இயங்கும் மகாத்மா காந்தி கிராமியக் கல்வி தேசிய சபையின் "ஒரு மாவட்டம் ஒரு பசுமைக் கல்லூரி" என்னும் விருது ஆண்டுதோறும் வழங்கி வருகின்றது. கடந்த கல்வி ஆண்டு 2020- 21ம் ஆண்டிற்கான இந்த விருது உடுமலைப்பேட்டை ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதினை திருப்பூர் மாவட்ட கலெக்டர் வினீத்திடம் இருந்து கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில், கல்லூரியின் நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர்கள் பேராசிரியர்கள் மலர்விழி மற்றும் பங்கஜம் ஆகியோர் உடனிருந்தனர்.

தினகரன்

# INDEPENDENCE DAY CELEBRATION (17.08.2021)

## ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் சுதந்திர தின விழா



திருப்பூர், ஆக. 17: ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் 75வது சுதந்திர தின விழா நடந்தது. கல்லூரியின் செயலர் சுமதி கிருஷ்ணபிரசாத் முன்னிலை வகித்தார்.

கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி தேசிய கொடியேற்றினார். 3-ம் ஆண்டு பொருளாதாரத் துறை மாணவி மோனிகா கொடி வணக்க பாடல் பாடினார். தேசிய மாணவர் படையினர் அணிவகுப்பு நடந்தது. தேசிய ஒருமைப்பாடு குறித்த உறுதிமொழியை மூன்றாம் ஆண்டு ஆங்கிலத் துறை மாணவி சசிப்பிரியா எடுத்துரைத்தார். கணிதவியல் துறை இணைப்பேராசிரியர் ஏஞ்சல் ஜாய் சுதந்திரத்தின் இன்றியமையாமை குறித்து சிறப்புரையாற்றினார். 3-ம் ஆண்டு வணிகவியல் துறை மாணவி தேன்மொழி கீதாஞ்சலி சிறப்புரையாற்றினார். ஏற்பாடுகளை கல்லூரியின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

# ONAM FESTIVAL CELEBRATION (25.08.2021)



ஸ்ரீ.ஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரியில்

## நிறுவனர் பிறந்த நாள், ஓணம் திருவிழா

திருப்பூர், ஆக. 25: ஸ்ரீ.ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நிறுவனரின் 135 ஆவது பிறந்தநாள் மற்றும் ஓணம் திருவிழா நேற்று கூட்ட அரங்கில் நடைபெற்றது. கல்லூரி செயலர் ஸ்ரீமதி. சுமதி கிருஷ்ணபிரசாத் முன்னிலை வகிக்க, கல்லூரி இயக்குனர் முனைவர் ஜே.மஞ்சுளா மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர். என் ராஜேஸ்வரியால் நிகழ்வு துவங்கப்பட்டது. கல்லூரி நிறுவனர் கோ.வே கோவிந்தசாமி நாயுடு ஐயாவின் புகைப்படத்திற்கு கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் மரியாதை செலுத்தினார்கள்.

ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரம நாமம் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவிகளால் பாராயணம் செய்யப்பட்டது. பஜனை பாடல்கள் மாணவிகளின் குழுவினரால் இசைக்கப்பட்டன.

இவ்விழாவில் கல்லூரி பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், மாணவிகள் சமூக இடைவெளியை கடைபிடித்து கலந்து கொண்டார்கள். மனித நேயத்திற்காகவும். உலக நன்மைக்காகவும் கூட்டு வழிபாடு செய்யப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை கல்லூரி பேரவைத் தலைவரும், வணிகவியல் துறையின் தலைவருமான முனைவர் என்.லட்சுமி மற்றும் மன்ற உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

# CORONA VACCINATION CAMP (05.09.2021)

## கொரோனா தடுப்பூசி முகாம்



**திருப்பூர், செப். 5:** திருப்பூர் மாவட்டம் உடும்லையில் அமைந் துள்ள ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் ஆரம்ப சுகாதார நிலையம், கல்லூரி ஆரோக்கியம் மற்றும் சுகாதார மன்றம், மாணவர் பேரவை சார்பில் கோவிட்-19 இலவச தடுப் பூசி முகாம் நடந்தது. முகாமில், கல்லூரியின் செயலர் சுமதி கிருஷ்ணபிரசாத், ஆய்வுபுல இயக்குனர் மஞ்சுளா, கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி, உதவிப் பேராசிரியர் கவிதா, முனைவர் லட்சுமி, மருத்துவ அலுவலர் மகேஸ்வரி, மருத்துவர் கவுதம், நகர்ப்புற சுகாதார செவிலியர் கீதா, பரப்புரையாளர் இளங்கோ, பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு தடுப்பூசியை செலுத்தி கொண்டனர்.

# INAGURATION OF NATIONAL BOOK FAIR (08.09.2021)


## தேசிய புத்தக கண்காட்சி துவக்கம்

### பல் துறை நூல்கள் அணிவகுப்பு

**உடுமலை, செப். 8–**

உடுமலையில், 36வது தேசிய புத்தகக்கண்காட்சி நேற்று துவங்கியது. வரும், 16ம் தேதி வரை நடக்கிறது.

நேஷனல் புக் டிரஸ்ட், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், உடுமலை தொழில் வர்த்தக சபை, அரசு கலைக் கல்லூரி முன்னாள் மாணவர் சங்க அறக்கட்டளை மற்றும் ரோட்டரி, இன்னர்வீல் சங்கங்கள் சார்பில், 36வது தேசிய புத்தகக்கண்காட்சி, உடுமலை கல்பனா ரோடு, சண்முகப்பிரியா காம்ப்ளக்ஸ் வளாகத்தில் நேற்று துவங்கியது.



உடுமலையில், நடந்த புத்தக கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள்.

உடுமலை தொழில் வர்த்தக சபை தலைவர் அருண்கார்த்திக் தலைமை வகித்தார். பொள்ளாச்சி எம்.பி., சண்முகசுந்தரம், புத்தகக்கண்காட்சியை திறந்து வைத்து, முதல் விற்பனையை துவக்கி வைத்தார்.

இக்கண்காட்சியில், வரலாறு, அரசியல், சமூகவியல், ஆன்மிகம், மருத்துவம், அறிவியல், ஆங்கிலம், தமிழ் இலக்கியம், சிறுவர்களுக்கான நூல்கள் என பல்வேறு துறை சார்ந்து, பல ஆயிரக் கணக்கான நூல்கள் இடம் பெற்றுள்ளன.

வரும், 16ம் தேதி வரை, தினமும் காலை, 9:00 மணி முதல் இரவு, 9:00 மணி வரை நடக்கிறது. 10 முதல் 25 சதவீதம் வரை சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது.

முகக்கவசம், தனி மனித இடைவெளி என கொரோனா பாதுகாப்பு வழிமுறைகளுடன் இக்கண்காட்சியில் பொதுமக்கள் பங்கேற்கலாம் என, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# SOCIAL SERVICE AT THUNGAVI HIGH SCHOOL (18.09.2021)

## ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி கல்லூரி சார்பில் விழிப்புணர்வு பேரணி

**உடுமலை, செப்: 18:** உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி சார்பில் நாட்டு நலப் பணித்திட்டம் மற்றும் கொரோனா விழிப்புணர்வு பேரணி துங்காவி கிராமத்தில் நடைபெற்றது. பேரணியை மடத்துக்குளம் ஒன்றியக் குழு தலைவர் காவியா ஐயப்பன் துவக்கி வைத்தார்.

இப் பேரணியில் ஒன்றிய குழு துணைத் தலைவர் ஈஸ்வரசாமி, துங்காவி ஆரம்ப சுகாதார மையத் தலைமை மருத்துவர் கார்த்திகேயன், கிராம நிர்வாக அலுவலர் வினோத், தாந்தோணி ஊராட்சி மன்றத் தலைவர் சுகந்தி செல்லப்பன் ஆகியோர் பங்கேற்றனர்.

இப் பேரணியில் நாட்டு நலப் பணித் திட்ட மாணவிகள் பொது மக்களுக்கு கொரோனா தடுப்பூசி முக்கியத்துவத்தை எடுத்துரைத்து தடுப்பூசி செலுத்தி கொள்ள வலியுறுத்தினர்.

சமூக இடைவெளி கடைபிடித்தல்,கைகளை சோப்பு போட்டு சுத்தம் செய்தல் போன்ற அறிவுரைகளை எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் கீதா, திருமதி மாலினி, முனைவர் மகேஸ்வரி மாணவிகளை வழி நடத்தினர்.

அப்துல் கலாம் அறக்கட்டளை சார்பில் சமூக ஆர்வலர் நவனீதராஜா அவர்கள் பேரணி நடத்துவதற்கு உதவினார்.



உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி சார்பில் நாட்டு நலப் பணித்திட்டம் மற்றும் கொரோனா விழிப்புணர்வு பேரணி துங்காவி கிராமத்தில் நடை பெற்றது.

# CLEANING WORK OF STUDENTS IN LIBRARY (28.10.2021)

## நூலகத்தில் மாணவியர் தூய்மைப்பணி




மடத்துக்குளம் அருகே, துங்காவி நூலகத்தில் புத்தகங்களை சுத்தம் செய்து அடுக்கி வைத்த மாணவியர்.

தூய்மை இந்தியா திட்டத்தில், உடுமலை ஜி.வி.ஜி., தனியார் கல்லூரி மாணவியர் நாட்டு நலப்பணி திட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, துங்காவி கிராமத்திலுள்ள பள்ளிக்கு சென்று தூய்மையாக இருப்பதால் ஏற்படும் நன்மைகள், தூ ய்மை பழக்கவழக்கங்களால் நோய் தாக் காமல் தவிர்த்தல் போன்றவைகளை மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர்.

இதோடு, பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடவு செய்தனர். இதற்கு பின்பு மரங்களின் முக்கியத்துவம் பற்றியும். இயற்கை வளங்களை க்காப்பது குறித்தும்,மரங்கள் வளர்ப்பதால் சுத்தமான சுவாசக் காற்று கிடைப்பது குறித்தும் எடுத்துரைத்தனர் இதற்குப் பின்பு, ஊர்ப்புற நூலகத்திற்கு சென்று அங்குள்ள புத்தகங்களை எடுத்து சுத்தம் செய்து சீராக அடுக்கி வைத்தனர். அதனை தொடர்ந்து உச்சிமாகாளியம்மன் கோவில் வளாகத்தை சுத்தம் செய்தனர்.

# WELFARE CARD REGISTRATION CAMP (13.12.2021)



அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான

## நலவாரிய அட்டை பதிவு முகாம்

உடுமலை, டிச. 13–

உடுமலை ஸ்ரீ ஜி.விஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியின் தகவல் தொழில்நுட்பத்துறை ,டாக்டர் அப்துல் கலாம் மக்கள் பாதுகாப்பு சேவை அறக்கட்டளை மற்றும் துங்காவி ஊராட்சி சார்பில் மத்திய அரசின் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நலவாரிய அட்டை பதிவு முகாம் உடையார்பாளையத்தில் நடந்தது. உடையார்பாளையம் சமுதாய நலக்கூடத்தில் நடந்த முகாமிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் ராஜேஸ்வரி தலைமை வகித்தார். வணிகவியல் துறை மற்றும் பேரவை ஒருங்கிணைப்பாளர் லட்சுமி மற்றும் துங்காவி ஊராட்சி ஒன்றியத் தலைவர் கே. உமாதேவிகாளீஸ்வரன், துணைத்தலைவர் பொன்னுத்தாய் தங்கராஜ், வார்டு உறுப்பினர்கள் ஈஸ்வரன், ராஜு ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு புத்தாடை மற்றும் மரக்கன்றுகளை வழங்கினர். நிகழ்ச்சியில் கல்லூரி தகவல் தொழில்நுட்பத் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் பொதுமக்களுக்கு இலவச பதிவு செய்ய உதவினர்.இதில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

# SPECIAL TRAINING BY GALILEO SCIENCE CLUB (20.12.2021)



உடுமலை சுற்றுச்சூழல் சங்கம் மற்றும் கலிலியோ அறிவியல் கழகம் சார்பில், தென்னை நாரிலிருந்து கால் மிதியடி தயாரிக்கும் மதிப்பு கூட்டு பயிற்சி, ஏரிப்பாளையத்தில் நடந்தது.

## மாணவியருக்கு பயிற்சி வகுப்பு

உடுமலை சுற்றுச்சூழல் சங்கம் மற்றும் கலிலியோ அறிவியல் கழகம் சார்பில், ஏரிப்பாளையத்தில் நடந்த, தென்னை நாரிலிருந்து கால்மிதி தயாரிக்கும் மதிப்பு கூட்டு நான்கு நாள் பயிற்சியில், ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரி இரண்டாமாண்டு, இளங்கலை இயற்பியல் பிரிவு மாணவியர் கலந்து கொண்டனர்.

நேற்றுமுன்தினம் நிறைவு விழா நடந்தது. சுற்றுச்சூழல் சங்க தலைவர் மணி, தலைமை வகித்தார். சங்க செயலாளர் நாகராஜன், வரவேற்றார். விவேகானந்தா வித்யாலயா பள்ளி தாளாளர் மூர்த்தி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியான கருத்துக்களை மாணவ, மாணவியர் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டுமென, அறிவுறுத்தினார்.

பின், பயிற்சியில் கலந்து கொண்ட மாணவியருக்கு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# PRIZE DISTRIBUTION – NATIONAL VOTERS' DAY COMPETITION (28.01.2022)



உடுமலை தாலுகா அலுவலகத்தில், தேசிய வாக்காளர் தின போட்டிகளில், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## மாணவியருக்கு பரிசு வழங்கல்

தேசிய வாக்காளர் தினத்தையொட்டி, தேர்தல் கமிஷன் வழிகாட்டுதலின்படி, பள்ளி, கல்லூரி, மாணவ, மாணவியருக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

உடுமலை தாலுகாவில், உடுமலை அரசு கலைக் கல்லூரி, ஜி.வி.ஜி., கல்லூரி, கமலம் கலை அறிவியல் கல்லூரி, பாரதியார் நூற்றாண்டு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, எஸ்.கே.பி., மற்றும் ஆர்.ஜி.எம்., பள்ளிகளை சேர்ந்த, 92 மாணவ, மாணவியர் போட்டிகளில் பங்கேற்றனர்.

கட்டுரை, ஓவியம், ஸ்லோகன், போஸ்டர், பாட்டு, நடனம் உட்பட போட்டிகளில், வெற்றி பெற்றவர்களுக்கு உடுமலை தாசில்தார் ராமலிங்கம் பரிசுகளை வழங்கினார்.

தேர்தல் பிரிவு துணை தாசில்தார் சாந்தி, தேர்தல் பிரிவு அலுவலர்கள் கருப்புசாமி, அன்பரசு உட்பட பலர் பங்கேற்றனர்.

இதே போல், மடத்துக்குளம் தாலுகா அலுவலகத்திலும், மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

# REPUBLIC DAY CELEBRATION (28.01.2022)

## புகள் கொண்டாட்டம்



ள் சார்பில் கொண்டாடப்பட்டது. ■ போடிபாளையம் பசுமைகுரல் உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நடந்த

கோட்டூர், ஆனைமலை, வேட்டைக்காரன்புதுார், பெத்தநாயக்கனுார் பகுதிகளிலும் வட்டார தலைவர் ஜவஹர் பாண்டியன் முன்னிலையில் குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில், மாவட்ட நிர்வாகி தினேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**உடுமலை**

உடுமலை மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களில், நாட்டின் 73வது குடியரசு தின விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இனிப்புகள் வழங்கி, தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

உடுமலை ஜி.வி. ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில் குடியரசு தின விழா நடந்தது.

கல்லூரி செயலர் சுமதி முன்னிலை வகித்தார். முதல்வர் ராஜேஸ்வரி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இதையடுத்து தேசிய மாணவர் படையின் அணி வகுப்பும் இடம்பெற்றது. இயற்பியல் துறை இணைப் பேராசிரியர் அறம் குடியரசு தின விழாவின் சிறப்புகள் குறித்து பேசினார்.

வணிகவியல் துறைத் தலைவர் லட்சுமி, கல்லூரி பேரவை தலைவர் பூரணாஸ்ரீ ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# CHILDREN'S DAY CELEBRATION (01.02.2022)



## உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி கல்லூரியில் குழந்தைகள் தின கொண்டாட்டம்

மடத்துக்குளம், பிப்.1–

உடுமலை ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் கூகுள் மீட் வாயிலாக தேசிய குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி செயலாளர் சுமதி கிருஷ்ணபிரசாத், ஆய்வுப்புல இயக்குனர் மஞ்சுளா, முதல்வர் ராஜேஸ்வரி ஆகியோர் தலைமை வகித்தனர்.

முன்னதாக கல்லூரி பேரவைத் தலைவர் பூரணஸ்ரீ வரவேற்றார். 'பாலின சமத்துவத்தை ஊக்குவிக்க பெண்களின் அதிகாரம்' என்ற தலைப்பில், மாணவிகள் குழு முறையில் கலந்துரையாடினர். அதில், பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளுக்கு எதிர்த்துப் போராடுவதற்கான அதிகாரம், சமுதாயத்தில் பெண் குழந்தைகளின் பிறப்புரிமையை நிலைநாட்டுதல், பாலியல் வன்முறையிலிருந்து பெண் குழந்தைகளை காக்கும் சட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை, வணிகவியல் துறைத்தலைவர் லட்சுமி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் செய்திருந்தனர்.

# NEW EDUCATION POLICY (26.02.2022)



# 'புதிய கல்விக்கொள்கை நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும்'

**உடுமலை, பிப். 26–**

''சர்வதேச அளவிலான எதிர்கால சவால்களை, போட்டிகளை நமது மாணவர்கள், எதிர்கொண்டு, சாதிக்க, புதிய தேசிய கல்விக்கொள்கை முக்கிய பங்காற்றும்,'' என அண்ணா பல்கலை., முன்னாள் துணைவேந்தர் பாலகுருசாமி பேசினார்.

உடுமலை ஜி.வி.ஜி., கல்லூரி, அகமதிப்பீட்டு கழகம் மற்றும் பாடத்திட்ட மேம்பாட்டுக்கழகம் சார்பில், புதிய தேசிய கல்விக்கொள்கை–2020 குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கு ஜி.வி.ஜி., கலையரங்கில் நேற்று நடந்தது.

கல்லூரி செயலாளர் சுமதி கருத்தரங்கை துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி வரவேற்றார். கல்லூரி இயக்குனர் மஞ்சுளா தலைமை வகித்தார்.

கருத்தரங்கில், அண்ணா பல்கலை., முன்னாள் துணை வேந்தர் பாலகுருசாமி பேசியதாவது:

நீண்ட காலமாக, பரிசீலிக்கப்பட்டு, தற்போது, புதிய தேசிய கல்விக்கொள்கை–2020 தற்போது அமல்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் காரணங்களுக்காக, இந்த கொள்கைக்கு பல்வேறு எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால், தரமான கல்வியை அனைவருக்கும் வழங்க, புதிய கல்விக்கொள்கை முக்கிய தேவையாக மாறியுள்ளது.

நாட்டின் சுதந்திரத்துக்கு பிறகு, படித்தோர் எண்ணிக்கை அதிகரித்தாலும், தரமான கல்வியை தருவதில், பின்தங்கியே உள்ளோம்; நாட்டின் அனைத்துத்துறைகள் வளர்ச்சிக்கும், கல்வியே ஆதாரமாக உள்ளது. கல்விக்கொள்கையானது பட்டதாரிகளை மட்டும் உருவாக்கும் நிலையை மாற்றி, அனைத்து திறமைகளையும் உள்ளடக்கிய, மனிதர்களையும், சமுதாயத்தையும் உருவாக்கும் விதத்தில் இருக்க வேண்டும்.

மேற்படிப்பு என்பது தொழிலாளர்களை மட்டும் உருவாக்காமல், புதிய கண்டுபிடிப்புகள் வாயிலாக, தொழில் முனைவராகவும் அவர்களை மாற்றும் விதத்தில் இருப்பது அவசியமாகும்.

இத்தகைய கல்விக்கொள்கையை நமது நாடு உருவாக்காமல் விட்டதால், இன்னும், வளரும் நாடாகவே இருக்க வேண்டியுள்ளது. சர்வதேச அளவில், புதிய கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமை பெறுவதில், ஜப்பான் முன்னிலையில் உள்ளது; நம் நாடு, 0.3 என்ற சதவீதம் அளவுக்கு பின்தங்கியுள்ளது.

தற்போது அமல்படுத்தப்பட்டுள்ள, தேசிய கல்விக்கொள்கையானது, சர்வதேச அளவில், வரும் காலங்களில், உருவாகும் தொழில் மாற்றங்கள் உட்பட அனைத்து வகையான சவால்களையும், நம் நாட்டு மாணவர்களும் எதிர்கொள்ளும் வகையில், அமைந்துள்ளது.

இத்திட்டத்தில், புதிய கண்டுபிடிப்புகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும், அதிக முக்கியத்துவம் தரப்பட்டு, அதற்கென தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

கல்வி முறையை மாற்றினால், நாட்டை முன்னேற்றும் வகையிலான, இளைய தலைமுறையை உருவாக்க முடியும்.

இவ்வாறு, அவர் பேசினார். இயற்பியல்துறை இணை பேராசிரியர் அறம் நன்றி தெரிவித்தார்.

■ உடுமலை ஜி.வி.ஜி., கல்லூரி, அகமதிப்பீட்டுக்கழகம் மற்றும் பாடத்திட்ட மேம்பாட்டுக்கழகம் சார்பில், நடந்த புதிய தேசிய கல்விக்கொள்கை–2020 குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கில், கலந்து கொண்டவர்கள். ■ கருத்தரங்கில், அண்ணா பல்கலை., முன்னாள் துணைவேந்தர் பாலகுருசாமி பேசினார்.

# SCIENCE FESTIVAL CELEBRATION (27.02.2022)



அறிவியல் திருவிழா நடைபெற்றதை படத்தில் காணலாம்.


## உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில்

# அறிவியல் திருவிழா கொண்டாட்டம்

மடத்துக்குளம், பிப். 27– 75வது சுதந்திரதின விழாவையொட்டி 75 இடங்களில் தேசிய அறிவியல் வார விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் மட்டும் 5 இடங்களில் கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவின் ஒரு பகுதியாக கோவை மண்டலத்தின் சார்பாக உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் 2 நாட்கள் அறிவியல் திருவிழா கொண்டாடப்பட்டது. கல்லூரி மாணவிகளுக்கு போஸ்டர் தயாரித்தல் ,கட்டுரைப் போட்டி கவிதைப் போட்டி ஆகியவை நடத்தப்பட்டன. இதில் சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர். வானத்தை அளப்போம் என்ற தலைப்பில் இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி நெல்லை முத்து மாணவிகளுடன் இணையவழியில் கலந்துரையாடினார். நிகழ்வில் விலங்கியல் துறை பேராசிரியர் முனைவர். கலைச்செல்வி வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி தலைமை வகித்தார். உயிர்த்தொழில் நுட்பத் துறை ஒருங்கிணைப்பாளர் உமா மகேஸ்வரி , அறிவியல் பேராசிரியர்கள், 300க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர். அதன் தொடர்ச்சியாக இரவு வான் நோக்கும் நிகழ்ச்சியும் வானவியலில் ஆர்வத்தை ஏற்படுத்தும் விதமாக செயல் விளக்கங்களும் மாணவிகளுக்கு செய்து காட்டப்பட்டது. இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தி னராக கோவை சலீம் அலி பறவைகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதுநிலை விஞ்ஞானி மகேந்திரன் கலந்துகொண்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் இந்திய விஞ்ஞானிகளின் சாதனைகள் , மற்றும் எதிர்காலம் பற்றிய கணிப்பு என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்களோடு ஜி.வி.ஜி., கலையரங்கத்தில் கலந்துரையாடினார். நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்துகொண்டு விஞ்ஞானியிடம் பல்வேறு வினாக்களை கேட்டு கலந்துரையாடினர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியினை தேசிய அறிவியல் வார விழா கோவை மண்டல துணை ஒருங்கிணைப்பாளர் கண்ணபிரான் ஒருங்கிணைத்தார். இயற்பியல் துறை பேராசிரியர் நிர்மலா நன்றி கூறினார்.

# WOMEN'S DAY CELEBRATION (08.03.2022)

## உடுமலையில் உலக மகளிர் தினக் கொண்டாட்டம்



ஜிவிஜி கல்லூரியில் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்ட மாணவிகள்.

**உடுமலை, மார்ச் 8:** உடுமலையில் பல்வேறு கல்வி நிறுவனங்களில் உலக மகளிர் தின விழா செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது.

உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் உலக மகளிர் தின விழாவையொட்டி நொண்டி உள்ளிட்ட பல்வேறு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன. மேலும், சமையல், போட்டோ ஃகிராபி, ஓவியப் போட்டிகளும் நடைபெற்றன. இதில் பேராசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர். சிறப்பிடம் பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவை ஒட்டி சிறப்பு கருத்தரங்கமும் நடைபெற்றது. செயலர் சுமதி கிருஷ்ணபிரசாத், இயக்குநர் ஜெ.மஞ்சுளா, முதல்வர் என்.ராஜேஸ்வரி, பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

உடுமலை அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற மகளிர் தின விழாவுக்கு, முதல்வர் சோ.கி.கல்யாணி தலைமை வகித்தார். இதில் 'என்னைக் கவர்ந்த பெண்' என்னும் தலைப்பில் பேராசிரியர் ஹெச்.பி. இராமலிங்கம், பேராசிரியர் மு.மதியழகன் ஆகியோர் பேசினர். மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

உடுமலை கிளை நூலகம் எண்-2இல் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, நூலகர் வி.கணேசன் தலைமை வகித்தார். இதில் குறும்படம் திரையிடப்பட்டது. மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

# AWARENESS RALLY AGAINST PLASTIC PRODUCTS (15.03.2022)



உடுமலையில்

## பிளாஸ்டிக் பொருட்கள் ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம்

உடுமலை, மார்ச்.15-

உடுமலை நகராட்சி நிர்வாகம் மற்றும் ஸ்ரீஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் சார்பில் பிளாஸ்டிக் பொருட்கள் ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. இந்த ஊர்வலம் உடுமலை பழைய பஸ் நிலையம் பகுதியில் உள்ள காமராஜர் சிலை அருகில் இருந்து புறப்பட்டது. ஊர்வலத்தை நகராட்சி ஆணையாளர் பி.சத்தியநாதன் தொடங்கி வைத்தார். நகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் க.கவுரி சரவணன், சுகாதார ஆய்வாளர்கள் ஆர்.செல்வம், பி.செல்வம், எஸ்.ராஜ்மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊர்வலத்தில் நகராட்சி சுகாதார பிரிவினர், ஸ்ரீஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி என்.சி.சி. மாணவிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். ஊர்வலம் நகர முக்கிய வீதிகள் வழியாக சென்று குட்டைத்திடலில் முடிவடைந்தது. ஊர்வலத்தில் சென்றவர்கள் பிளாஸ்டிக் பொருட்கள் ஒழிப்பு விழிப்புணர்வு குறித்து எழுதப்பட்ட பதாகைகளை கைகளில் பிடித்து சென்றனர்.

## SCIENCE FAIR (23.03.2022)

# அறிவியல் கண்காட்சி

**உடுமலை, மார்ச் 23–**

உடுமலை விசாலாட்சி மகளிர் கல்லூரியில், அறிவியலை அறிவோம் என்ற தலைப்பில், இரண்டு நாள் கண்காட்சி நடந்தது.

கல்லூரி செயலாளர் சுமதி முன்னிலையில், முதல்வர் ராஜேஸ்வரி, தலைமை வகித்தார். உடுமலை கல்வி மாவட்ட அலுவலர் பழனிசாமி, கண்காட்சியைத் துவக்கி வைத்தார்.

# NSS CAMP AT THUNGAVI VILLAGE (24.03.2022)

## என்.எஸ்.எஸ்., சிறப்பு முகாம் 117 மாணவியர் பங்கேற்பு

**உடுமலை, மார்ச் 24–**

உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியின், என்.எஸ்.எஸ்., சிறப்பு முகாம், ஏழு நாட்கள் நடக்கிறது.

அதற்கான துவக்க நிகழ்ச்சி, துங்காவி கிராமத்தில் நடந்தது. கல்லூரி செயலாளர் சுமதி, முன்னிலையில், முதல்வர் ராஜேஸ்வரி, தலைமை வகித்தார்.

பாரதியார் பல்கலை என்.எஸ்.எஸ்., ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை, பங்கேற்றார். பின், என்.எஸ்.எஸ்., செயல்படும் விதம், மாணவியரின் நலன், துங்காவி ஊர் மக்களுக்கு ஆற்ற வேண்டிய செயல்திட்டம் குறித்து பேசினார்.

நிகழ்ச்சியில், விவேகானந்தா வித்யாலயா தாளாளர் மூர்த்தி, வணிகவியல் துறைத்தலைவர் லட்சுமி, என்.எஸ்.எஸ்., அலுவலர்கள் மலர்விழி, ஸ்ரீபிரியா உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த முகாமில், 117 மாணவியர் பங்கேற்றுள்ளனர்.

# WORLD HEALTH DAY AWARENESS PROGRAM
# (09.04.2022)

# உலக சுகாதார தின விழிப்புணர்வு நிகழ்ச்சி

**உடுமலை, ஏப். 9–**

'ஊட்டச்சத்து மிக்க உணவை உண்போம்; வளமான இந்தியாவை உருவாக்குவோம்' என, கல்லூரி பேராசிரியர்கள் உட்பட பலர் உறுதிமொழி ஏற்றனர்.

உடுமலை ஸ்ரீ விசாலாட்சி மகளிர் கல்லூரியின், ஆரோக்கியம் மற்றும் சுகாதார மன்றம், உன்னத் பாரத் அபியான் திட்டக் குழுமம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் சார்பில் உலக சுகாதார தினம் கொண்டாடப்பட்டது.



பெரிய வாளவாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில், உலக சுகாதார தினம் கொண்டாடப்பட்டது.

பெரிய வாளவாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு, கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி, ஊராட்சித்தலைவர் தேவராஜ், தலைமை வகித்தனர். முன்னதாக, பேராசிரியர் கவிதா, வரவேற்றார். டாக்டர் ஆனந்தகுமார், குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் வீணா ஆகியோர், ஊட்டச்சத்து உணவின் அவசியம் குறித்து பேசினர். நிகழ்ச்சியில், ஊட்டச்சத்து உணவுகளை உள்ளடக்கிய கண்காட்சியும் இடம்பெற்றது.

தொடர்ந்து, 'ஊட்டச்சத்து மிக்க உணவை உண்போம்; வளமான இந்தியாவை உருவாக்குவோம்' என, அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். பேராசிரியர்கள் மெகர் பானு, சாரதாமணி, விஜயா, ராஜேஸ்வரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

★ உலக சுகாதார தினத்தை முன்னிட்டு, குடிமங்கலம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில், பெதப்பம்பட்டி என்.வி., பாலிடெக்னிக் கல்லூரியில் கருத்தரங்கம் நடந்தது.


இதில், வட்டார மருத்துவ அலுவலர் சுந்தரபாண்டியன், கல்லூரித்தலைவர் வெங்கட்ராமன், முதல்வர் பன்னீர் செல்வம், மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மைய ஆலோசகர் சவுமியா, மன நல ஆலோசகர் பிரவீன் குமார், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் யோகானந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இம்முகாமில், சுகாதாரம், உடல் நலன் பேணுதல், உணவு முறை உள்ளிட்டவை குறித்து விளக்கப்பட்டது.

மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மைய அலுவலர்கள், புகையிலை பொருட்கள் உட்கொள்வதனால் ஏற்படும் தீமைகள் குறித்து விளக்கினர்.

இதில், வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் 700க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

# AWARENESS PROCESSION (12.04.2022)



## சமரச வார விழா
## விழிப்புணர்வு ஊர்வலம்

**உடுமலை, ஏப். 12–**

உடுமலையில், நீதித்துறை சார்பில் நடக்கும் சமரச வார விழா குறித்து விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.

மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளுக்கு தீர்வு காணும் வகையில், மாவட்ட மற்றும் வட்ட நீதிமன்றங்களில் உள்ள சமரச மையங்களை பொதுமக்கள் அணுக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், உடுமலையில் நேற்று சமரச வார விழா விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. உடுமலை வட்ட சட்ட பணிகள் குழு தலைவர் மற்றும் சார்பு நீதிபதி மணிகண்டன் தலைமை வகித்தார். ஜே.எம்.,1 மாஜிஸ்திரேட் விஜயகுமார், வக்கீல்கள், போலீசார் மற்றும் ஜி.வி.ஜி., கல்லூரி மாணவியர் பங்கேற்றனர்.

நீதிமன்ற வளாகத்தில் துவங்கிய ஊர்வலம் பிரதான ரோடுகள் வழியாக வந்து, நீதிமன்றத்தை அடைந்தது. இதில், சமரச வார விழா குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நோட்டீஸ்கள் வழங்கப்பட்து.